# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 தை 09 செவ்வாய்க்கிழமை (23.01.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 59


# உடன் பேச்சுக்கு வாருங்கள் இல்லையேல் சண்டைதான்

## புலிகளுக்கு அரசு எச்சரிக்கை

கொழும்பு, ஜனவரி 23

"மோதல்களை நிறுத்தி பேச்சு மேசைக்குத் திரும்புவதற்கு புலிகள் விரைந்து உடன்பட வேண்டும். இல்லையேல் மேலும் மோசமான சண்டைக்கு அவர்கள் முகம்கொடுக்க வேண்டியிருக்கும்."

- இவ்வாறு விடுதலைப் புலிகளுக்கு எச்சரிக்கை விடுத்திருக்கின்றது இலங்கை அரசு.

வாகரையைக் கைப்பற்றிய இராணுவ வெற்றியை அடுத்து இலங்கைப் பாதுகாப்புத்துறைப் பேச்சாளரும், அமைச்சருமான கெஹெலிய ரம்புக்வெல, இறுமாப்புடன் இவ்வாறு அறிவித்தார்.

இத்தகவலை 'றொய்ட்டர்' செய்தி நிறுவனம் வெளியிட்டது.

நைந்து போயுள்ள 2002 ஆம் ஆண்டின் யுத்த நிறுத்த உடன்பாட்டின் பிரகாரம் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசம் எனக் குறிப்பிடப்படும் வாகரைப் பகுதியை ஒரு வாரகால கடும் பீரங்கித் தாக்குதல்களின் பின்னர் அரசுப்படைகள் கைப்பற்றியிருக்கின்றன. இதன் மூலம் புலிகளின் பிடியிலிருந்து கிழக்கின் முக்கிய பிரதேசம் அரசுப் படைகளின். கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டது.

இராணுவம் அப்பகுதியைத் துடைத்தழித்ததையடுத்து கிழக்கில் உள்ள தொப்பிகல காட்டுக்குள் புலிகள் தங்கள் முகாம்களை நகர்த்தியுள்ளனர்.

"தொப்பிகல ஸ்திரமற்ற ஒரு பிரதேசம். படையினர் நேரத்துக்கு நேரம் தாக்குதலுக்கு இலக்காகும் ஆபத்து அங்கு உள்ளது. ஆகவே, அந்த ஆபத்தையும் விலக்க வேண்டிய கட்டாயம் நமக்கு உள்ளது." - இவ்வாறு தொலைபேசிமூலம் வழங்கிய செவ்வியில் அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்தார்.

(04 ஆம் பக்கம் பார்க்க)

## வவுணதீவில் ஞாயிறன்று மோதல்

மட்டக்களப்பு வவுணதீவு பகுதியில் விடுதலைப் புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையே நேற்றுமுன்தினம் இரவு முதல் கடும் மோதல் இடம்பெற்றது.

வவுணதீவு ஸ்ரீலங்காப் படை முகாமிலிருந்து விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் முன்னேற முயன்ற படையினரின் முயற்சி தமிழீழ விடுதலைப் புலிகளால் முறியடிக்கப்பட்டுள்ளது - என்று புலிகள் தெரிவித்துள்ளனர்.

முன்னேற முயன்ற படையினர் மீதான இம்முறியடிப்புச் சமரில் இரு படையினர் கொல்லப்பட்டுள்ளதுடன் நான்கு படையினர் படுகாயமடைந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் தரப்பில் இரு போராளிகளுக்கு மட்டும் சிறு காயங்கள் ஏற்பட்டுள்ளன. படையினர் நடத்திய எறிகணைத்தாக்குதலில் பொதுமக்களின் இரு வீடுகள் சேதமடைந்துள்ளன - என்றும் புலிகள் கூறியுள்ளனர். (ஐ)

## பேச்சு மூலமான தீர்வுக்கு அரசு தனது பற்றுறுதியை நிரூபிக்க வேண்டும்

### இராணுவப் பேச்சாளர் இளந்திரையன்

கொழும்பு, ஜன.23

பேச்சு மூலமான தீர்வில் அரசுக்குரிய பற்றுறுதியை வெளிப்படுத்தி நிரூபிப்பதற்கு இன்னும் அளவுக்கு அதிகமாகச் செய்யவேண்டியிருக்கும் என விடுதலைப் புலிகளின் இராணுவப் பேச்சாளர் இராசையா இளந்திரையன் தெரிவித்தார்.

றொய்ட்டருக்கு கிளிநொச்சியில் இருந்து தொலைபேசி மூலம் வழங்கிய செவ்வியில் அவர் இப்படித் தெரிவித்தார்.

அச்செவ்வியில் அவர் தெரிவித்ததாவது:-

"யுத்த நிறுத்தத்தையும் வைத்துக் கொண்டு இவ்வளவு காலமும் அவர்கள் புரிந்தவற்றைக் கவனித்தால், பேச்சு மூலமான தீர்வில் அரசுக்குரிய பற்றுதியை வெளிப்படுத்தி நிரூபிப்பதற்கும் இன்னும் அளவுக்கு அதிகமாகச் செய்ய வேண்டியிருக்கும்."

"கிழக்கில் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும், போர் வலுவையும் தக்க வைப்பதில் ஒரு சமநிலை மாற்றம் அடிக்கடி மாறி மாறி நேர்ந்து கொண்டுதான் இருக்கின்றது." என்றார் (உ)

## கிழக்கிலிருந்து புலிகளை வெளியேற்றியது போர்நிறுத்த மீறலே - கண்காணிப்புக் குழு

சென்னை, ஜன.23

விடுதலைப்புலிகளை கிழக்கில் இருந்து வெளியேற்றியது பெரும் போர்நிறுத்த மீறலாகும்.

போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு இவ்வாறு தெரிவித்திருப்பதாகச் சர்வதேசச் செய்தி முகவர் நிறுவனம் ஒன்று கூறுகிறது.

அரசாங்கம், விடுதலைப்புலிகள் ஆகிய இரண்டு தரப்புக்களும் மிகப் பல தடவைகள் போர் நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளன. கிழக்கில் இருந்து புலிகளை வெளியேற்றியதும் அவற்றில் ஒன்றே.

அந்த ஒப்பந்தம் காகிதத்தில் மட்டும் வெறுமனே உள்ளது - எனவும் கண்காணிப்புக் குழு மேலும் தெரிவித்திருக்கிறது. (அ)

## இனப்பிரச்சினைத் தீர்வுக்கு அமெரிக்காவின் விசேட பிரதிநிதி

### நியமிக்கக் கோருகிறார் காங்கிரஸ் உறுப்பினர்

நியூயோர்க், ஜன.23

இலங்கை இனப்பிரச்சினைக்குத் தீர்வு ஒன்றைக் காண்பதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ் நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும்.

ஜனநாயகக் கட்சி உறுப்பினரான பிராங் பலோன் காங்கிரஸ் சபைக் கூட்டத்தில் பேசும்போது இதனை வலியுறுத்தினார்.

இலங்கையில் அமைதி முயற்சிகளை முன்னெடுப்பதற்கு அமெரிக்கா ஒரு விசேட பிரதிநிதியை நியமிக்கவேண்டும். ஜெனி

(04 ஆம் பக்கம் பார்க்க)

### உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில்

## மீளக் குடியமர்த்தப்படுத்தக்கோரின் பட்டியலை உடன் சமர்ப்பிக்க உத்தரவு

### யாழ். அரச அதிபருக்கு உயர் நீதிமன்றம் நேற்று விடுத்தது

கொழும்பு, ஜன. 23

வடக்கில் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மக்களை மீளக் குடியமர்த்துவது தொடர்பாக, மீளக் குடியமர்த்தக்கூடியோரின் விவரங்கள் அடங்கிய பட்டியலை விரைந்து - உடனடியாக - சமர்ப்பிக்கும்படி யாழ்ப்பாணம் அரச அதிபருக்கு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா மற்றும் வலிகாமம் வடக்குப் பிரதேச விவசாயிகள் இருவர் தாக்கல் செய்திருந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் நேற்று நீதிமன்

(04 ஆம் பக்கம் பார்க்க)

## ப.நோ.கூ. சங்கக் கிளைகளில் இன்று வழமைபோல் விநியோகம்

### எரிபொருள் விற்பனையும் நடைபெறும்

யாழ்ப்பாணம், ஜன.23

குடாநாட்டில் இயங்கும் ப.நோ.கூ.சங்கங்களில் இன்றைய தினம் வழமைபோல் உணவுப் பொருள்கள் விநியோகிக்கப்படும் என்று அரச அதிபர் கே.கணேஷ் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

ப.நோ.கூ.சங்கக்கிளைகளில் கையிருப்பில் இருந்த பொருள்கள் நேற்று கணக்கிடப்பட்டன.

யாழ். நகரப்பகுதியில் நேற்று இடம்பெற்ற வர்த்தக நடவடிக்கைகளை தாம் நேரில் அவதானித்ததாகவும்-

திடீரென பொருள்களின் விலைகளை உயர்த்துவது கண்டிக்கத்தக்கது, கவலைக்குரியது. வர்த்தகர்கள், மக்களின் நலன்களைக் கருத்திற்கொண்டு செயற்படவேண்டும் என்றும் அரச அதிபர் தெரிவித்தார்.

**ப.நோ.கூ.சங்கக்கிளைகளில்**

இதேவேளை- கையிருப்பில் உள்ள பொருள்களின் விவரங்கள் செயலகத்துக்கு முழுமையாகக் கிடைத்ததும் அதிக அளவுகளில் விநியோகிக்க ஏற்பாடு செய்யப்படும்.

அரிசி, சீனி, பருப்பு ஆகியன போதிய அளவு கையிருப்பில் உள்ளன.

அவற்றை மக்களின் தேவைக்கு ஏற்ப வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று செயலக புனர்வாழ்வுத் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

தமக்கு வழங்கப்பட்டுள்ள பொருள்களை, செயலகத்தின் பணிப்புக்கு அமைய விநியோகம் செய்யவிருப்பதாக ப.நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்த மற்றும் சமுர்த்தி நிவாரணம், மீனவர் நிவாரணம் போன்றவற்றையும், பணத்துக்கும் விநியோகிக்கவென வழங்கப்பட்ட பொருள்களை ம் இன்று முதல் விநியோகிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்றும்- ப.நோ.கூ.சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

**எரிபொருள்கள்**

தற்போது கையிருப்பில் உள்ள எரிபொருள்கள் இன்று முதல் விநியோகிக்கப்படும்.

மண்ணெண்ணெய், டீசல் ஆகிய இரண்டினதும் கையிருப்பு மற்றும் விநியோகம் குறித்து நேற்றுப் பரிசீலனை செய்யப்பட்டது.

அவற்றுக்கு உடனடியாகத் தட்டுப்பாடு ஏற்படும் வாய்ப்பு மிகக் குறைவு- என்று

(04 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் கப்பல் சேவை உடனடியாகச் சாத்தியமில்லை

யாழ்ப்பாணம், ஜன.23

திருகோணமலைக்கும் காங்கேசன் துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிக்கும் வாய்ப்புக் குறைவு - என்று யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் நேற்றிரவு தெரிவித்தது.

வழமையான திருத்தும் பணிக்குச்சென்ற கப்பலின் வேலைகள் இன்னமும் பூர்த்தியடையவில்லை. திருத்த வேலைகள் பூர்த்தியானதும் சேவைகளை ஆரம்பிக்க முடியும் என்றும் சிவில் நிர்வாக வட்டாரங்கள் தெரிவித்தன.

**திருமலையில்**

இதற்கிடையில் பயணிகள் கப்பல் சேவையை உடனடியாக ஆரம்பிக்கக் கோரி திருகோணமலையிலும் நேற்று நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் பிரதேச செயலகத்தில் மகஜர்களைச் சமர்ப்பித்துள்ளனர்.

யாழ்ப்பாணம் வருவதற்காக அங்கு சுமார் பத்து நாள்களுக்கும் மேலாக காத்து நிற்கும் இவர்கள் பெருஞ்சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். (அ 1-151)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமண அழைப்பு

அன்புடையீர்!
தை மாதம் 14ஆம் திகதி (28.01.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 9.35 மணிமுதல் 10.35 மணிவரையுள்ள சுபமுகூர்த்தத்தில்
**செல்வன் முகுந்தன்** அவர்களுக்கும்
**செல்வி ஹிந்துஜா** அவர்களுக்கும்
திருமண வைபவம் மணமகள் இல்லத்தில் (31, பொன்னப்பா லேன், வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்) நடைபெறும்.
24.08.2006இல் ஒத்திவைக்கப்பட்ட திருமண வைபவத்தின் திருமண அழைப்பிதழ் கிடைக்கப்பெற்றவர்கள் இப்பத்திரிகை அழைப்பினை அன்புடன் ஏற்றுக்கொள்ளவும்.

**திரு.திருமதி சி.அற்புதராஜா**
கரந்தன்,
நீர்வேலி. (57411)

**திரு.திருமதி பா.கணநாதன்**
31, பொன்னப்பா லேன்,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

(இரு வீட்டார் அழைப்பு)

## கண்ணீர் அஞ்சலி



எமது அலுவலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி இ.இரத்தினராசா அவர்களின் அன்புத் தாய் திருமதி தாமோதரம்பிள்ளை முத்தாச்சி அவர்கள் இறைபதம் அடைந்ததையிட்டு அவரது ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் குடும்பத்தினரின் துயரில் நாமும் பங்கு கொள்கிறோம்.

பணிப்பாளரும், அலுவலர்களும்,
யாழ்.மேலதிக மாகாணக் கல்வி அலுவலகம்.

## 31ஆம் நாள் நினைவு



அரியாலை பகவான் சத்திய சாயி சேவா நிலைய அங்கத்தவராகிய சாயி சகோதரி **திருமதி விஜயலட்சுமி உமாகாந்தன்** அவர்களின் மறைவால் துன்புற்றிருக்கும் கணவர், பிள்ளைகளுக்கு அவரது 31ஆம் நாளை நினைவுகூரும் இந்நாளில் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

ஜெய் சாயிராம்

அரியாலை. (57426) **பகவான் சத்திய சாயி சேவா நிலையம்.**

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி

### திருமதி பிறைசூடி சரஸ்வதி



**தோற்றம்** 06-10-1925 **மறைவு** 24-12-2006

எம் அன்புக்கினிய அன்னையே!
தலைவன் நினைவுடனும்
தனயன் நினைவுடனும்
அல்லும் பகலும் உருகி உமை வருத்தி
உயிர் நீத்தீர்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
அனைவரும் இறைவனை இறஞ்சுகின்றோம்.

சிவகுல வீதி,
உரும்பிராய் மேற்கு. (57410) குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



யா/புத்தூர் சோமாஸ்கந்தா கல்லூரி
பிரபல பொருளியல் ஆசான்
**மகாலிங்கம் விக்னேஸ்வரன்** (விக்கி)
(B.A., (ECON) Hons, PG. Dip.in Edu. (JF)) அவர்களின் அகாலமரணச் செய்திகேட்டு எமது குடும்பம் அதிர்ச்சி அடைந்துள் ளது. அவரது இழப்பால் துயருறும் குடும்பத்திற்கும் கல்விச் சமூகத்திற்கும் ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

HSCMF
நவாலி வடக்கு. (சி-51838)

**செ.ரமேஷ்**
உள்ளூராட்சி உதவியாளர், பிரதேசசபை - வேலணை.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



"கர்த்தருக்குள் மரிப்பவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்"

### திருமதி சூசையா நீற்றம்மா

(ஓய்வுபெற்ற பிரதம தாதி, யாழ். போதனா வைத்தியசாலை)

மண்மகிழ்: 1933.02.16 ★★★★ விண் மகிழ்: 2006.12.24

அன்புத் தாய் திருமதி சூசையா நீற்றம்மா 24.12.2006 அன்று காலமானார். அன்னாரின் மறைவுகேட்டு ஆழ்ந்த அனுதாபங்களை வார்த்தைகளாலும், தொலைபேசி, கடிதங்கள் மூலம் தெரிவித்த அன்பர்களுக்கும் அன்னாரின் இறுதிப்பயணம்வரை உதவிய குருக்கள், கன்னியர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவருக்கும் எமது நன்றிகளைத் தெரிவிப்பதுடன், இன்று காலை 6.15 மணிக்கு யாழ். மரியன்னை பேராலயத்தில் ஒப்புக்கொடுக்கப்படும் திருப்பலியில் ஆன்ம இளைப்பாற்றிகாக மன்றாடுமாறு வேண்டுகின்றோம்.

16, சென்.சேபஸ்ரியன் வீதி,
யாழ்ப்பாணம்.
0776534197, 011 2691958 (57115)

பிரிவால் துயருறும்:
**கணவர், பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

## மரண அறிவித்தல்கள்

### அரசரத்தினம் கருணாநந்தி



திருநெல்வேலி, பாற்பண்ணை வீதியை நிரந்தரமாகவும் இல.6, சங்கிலியன் வீதியை தற்காலிக வசிப்பிடமாகக் கொண்டவரான அரசரத்தினம் கருணாநந்தி 21.01.2007 அன்று இறைபதமடைந்தார்.

அன்னார் விஜயலட்சுமியின் அன்புக் கணவரும் அபிராமி, அபிராம்,ஆர்த்திகா ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் இல.6, சங்கிலியன் வீதியில் இன்று முற்பகல் 10 மணிக்கு நடைபெற்று, கோண்டாவில் கட்டையாலடி இந்து மயானத்தில் தகனக்கிரியை நடைபெறும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **மனைவி, பிள்ளைகள்.**

### நாகநாதபிள்ளை பரமலிங்கம் (நயினாதீவு)

**(உரிமையாளர் லிங்கம் ஸ்ரோஸ், கொழும்பு, உரிமையாளர் லிங்கம் செரமிக், யாழ்ப்பாணம்)**



நயினாதீவைப் பிறப்பிடமாகவும் திருநெல்வேலியை வசிப்பிடமாகவும் கொண்ட நாகநாதபிள்ளை பரமலிங்கம் 21.01.2007 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக் குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

160, இராமநாதன் வீதி,யாழ்ப்பாணம்.
தொ.பே.222 7431 (57427)

தகவல்:
**ப.உதயகுமாரன்** (மகன்)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



கோட்டடியைச் சேர்ந்த குணநேசன் - விமலாம்பிகை தம்பதியரின்
**செல்வப் புதல்வி**
**காயத்திரி**
யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையில் கல்வி கற்று 2006இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 149 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ள இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் இவருக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுவதுடன் மேலும் கல்வியில் சிறந்து விளங்க சாந்தையர் மட விநாயகரை அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

**வாழ்த்துபவர்கள்:**
அப்பா, அம்மா, தம்பி, அப்பப்பா, அப்பம்மா, அம்மம்மா, பெரியப்பா, பெரியம்மா, தம்பிமார், மாமாமார், மாமிமார், மச்சான்மார், மச்சாள்மார், இத்தாலி அத்தை, மாமா, மச்சான், சுவிஸ் அத்தை, மாமா, மச்சான், மச்சாள்மார்.

ந.குணரத்தினம்,
92, சீனிவாசகம் வீதி,
கோட்டடி, யாழ்ப்பாணம். (57227)

## ஏழாலை களபாவோடை அருள்மிகு வசந்தநாகபூஷணி அம்மன் தேவஸ்தானம்

### வருடாந்த மகோற்சவம்

இன்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 01.02.2007 தீர்த்த உற்சவத்துடன் நிறைவுபெறும்.

சுபம்.

அம்மன் தொண்டன்
(57416) **ஆ.சாந்தலிங்கம்.**

### தவறிவிட்டது

P.பாலகோபால் என்பவருடைய(NPJC-7214) இலக்கமுடைய பதிவுப்புத்தகமும் காப்புறுதிப் பத்திரமும் வரிப்பத்திரமும் புன்னாலைக்கட்டுவன் வடக்குச் சந்தியில் இருந்து ஊரெழுவுக்குச் செல்லும் வீதியில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் முருகர் மாணிக்கம், திடம்புலம், புன்னாலைக்கட்டுவன் வடக்கு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

### தவறிவிட்டது

கொக்குவில் மேற்கு, இல.53, கே.கே.எஸ். வீதியைச் சேர்ந்த பத்மநாதன் யோகராணி (ராணி) என்பவருடைய தே.அ.அட்டையும் (இல.437571171V) விசேட அ.அட்டையும் நாவலர் றோட்டுக்கும் மினி பஸ் தரிப்பிடத்துக்கும் இடையில் 22.01.2007 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப் பிட்ட முகவரியில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். தொ.பே.: 222 5931

### விற்பனைக்கு

பந்தல், மணவறை,கதிரை, பாத்திரம், சோடினை மற்றும் மோட்டரோலா தொலைபேசி என்பன விற்பனைக்குண்டு.
தொடர்பு:
உரிமையாளர்:வ.நவரத்தினம்,
கல்வயல்றோட்,நுணாவில் மத்தி,
சாவகச்சேரி. T.P.:- 060 2213199

### நாய்க்குட்டிகள் விற்பனைக்கு

கறுப்பு, பிறவுண் 1 ½ மாத பொமனேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு.
தொடர்பு: **கிருஷ்ணசாமி**
றோசாத்தோட்டம், பிள்ளையார் வீதி,
தலங்காவல் பிள்ளையார் கோயிலடி,
திருநெல்வேலி.

### COMPUTER REPAIRING

Computer Hardware, Software
**திருத்துதல். வீடு வந்து செய்துகொடுக்கப்படும்.**
தொ.பே.இல.: 0776416022

### விற்பனைக்கு

நல்ல இன அல்சேசன் (ஜேர்மன் செப்பட்) 1½ வயது நிரம்பிய பெண் நாயும் MG-3358 இலக்கமுடைய பஜாஜ் பள்சர் மோட்டார் சைக்கிளும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: **J.N. நிமால்**
இல.40, நங்கா வீதி, நுநுநகர், யாழ்ப்பாணம். 021 222 6153

### தேவை

சிறந்த நிலையிலுள்ள
**போட்டோ கொப்பி இயந்திரம்**
விலைக்கு அல்லது வாடகைக்கு
**நியூசன் தளபாடம்**
**LANGUAGE CENTRE**
மதவடி ஒழுங்கை, சுதுமலை வடக்கு, மானிப்பாய்.
0773147390, 021 222 6287, 0777705963, 0602212682

## கண்ணீர் அஞ்சலி

எமது அலுவலகத்தில் நிகழ்ச்சித்திட்ட உதவியாளராகக் (சமூக சேவைகள் திணைக்களம்)கடமைபுரியும் செ.ராஜ்குமார் அவர்களின் அன்புத் தாயாரான
திருமதி இராசலட்சுமி செல்லத்துரைப்பிள்ளை
அவர்கள் 18.01.2007 அன்று அகாலமரணமடைந்ததையிட்டு துயருற்றிருக்கும் அவரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வடமராட்சி கிழக்கு,
உதவி அரசாங்க அதிபர் பணிமனை,
உத்தியோகத்தர் நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி கௌரி நடராசா
அவர்களின் தந்தை
**முருகேசு சின்னத்துரை**
அவர்களின் மறைவினால் துயற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர்கள்,
யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா
வித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

யா/ துன்னாலை கரி அதர் வித்தியாலயம் புலமைப்பரிசில் பரீட்சை: தரம்: 5 - 2006
தோற்றியோர்: 26 சித்தியடைந்தோர்: 08
சித்தியெய்திய மாணவச் செல்வங்கள்:

| பெயர் | புள்ளிகள் |
|---|---|
| செல்வி மயூரி கோபிநாத் | 164 - 3ஆம் இடம் (வடமராட்சி வலயம்) |
| செல்வன் இராகவன் பிரசன்னா | 157 |
| செல்வி பபிதா குணசேகரம் | 147 |
| செல்வி நிரோஷினா கமலநாதன் | 145 |
| செல்வி கோபினா கணேஸ்வரன் | 142 |
| செல்வி சிவப்பிரியா சிவசிதம்பரம் | 138 |
| செல்வி ஷர்மினி தனபாலசிங்கம் | 138 |
| செல்வன் தியாகராஜ ஐயர் பிரணவன் | 133 |
| **இவர்களுடன் நூறு புள்ளிகளுக்கு மேல் பெற்ற** | |
| செல்வன் கலைச் செல்வன் தர்ஷன் | 126 |
| செல்வன் ரவிச்சந்திரன் ராகுலன் | 118 |
| செல்வி கீர்த்திகா விக்கினேஸ்வரராஜா | 118 |
| செல்வன் விக்கினேஸ்வரன் பிரதீபன் | 111 |
| செல்வன் பாலேந்திரதாசன் சஜீவன் | 109 |
| செல்வன் வீரகுமார் அபினஜன் | 108 |
| செல்வி கீர்த்தனா சிறிதரன் | 107 |
| செல்வன் நாகராசா நிஷங்கன் | 100 |
| செல்வன் சிவலிங்கம் அனோசயன் | 100 |

மாணவர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம். இவர்களுக்கு ஊக்கமளித்து வழிகாட்டிய அதிபர் தா.ந.பரமானந்தர் அவர்களையும், இவர்களுக்கு கற்பித்த ஆசிரியைகளான திருமதி சசிகலா மணிவண்ணன் திருமதி சாந்தி ஆனந்தமூர்த்தி ஆகியோரையும் தரம் 1 முதல் 4 வரை கற்பித்த ஆசிரியர்களையும் உளமாரப்பாராட்டி நன்றி தெரிவித்துக்கொள்கின்றோம்.

பெற்றோர்,
(57121) பாடசாலை அபிவிருத்திச் சங்கம், நலன் விரும்பிகள்.

## குளிரூட்டிய நவீன CAR வாடகைக்கு



★ திருமணம் (அலங்காரத்துடன்)
★ சுற்றுலா ★ விசேட தேவைகளுக்கு

T.P.: 0777-903090
0777 246117

22, சோமசுந்தரம் அவெனியூ,

## புதிய பிரிவுகள் ஆரம்பம்

இவ்வார இறுதியில்!

- Diploma in Ms Office
- Diploma in Desktop Publishing
- Diploma in Internet & E-Mail
- Diploma in Accounting Packages
- Diploma in Computer Hardware
- Diploma in Computer Programming
- Grade - 10 & 11 ICT
- Children Program

மேலதிக விபரங்களுக்கு நேரில்.

**CB Computer Academy**
☎ - 021-4590291 Station Road, Kondavil.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



நிழலாக 27 . 09 . 1976 — நினைவாக 23 . 01 . 2006

### அமரர் சந்திரகாயன் விஜயதர்சன் (கோபி)

(கண்ணான் களஞ்சியம், மீசாலை)

ஆண்டுமோ ஒன்றுமாச்சு
அழுகையோ நம் சொத்துமாச்சு!
நீண்டு நீ வாழ்வா யென்ற
நினைவுமோ தொலைந்து போச்சு!
காலமோ கடுமையாச்சு
கனவுகளும் கலைந்து போச்சு!
கோலமோ கொடுமையாச்சு
போனதோ உந்தன் மூச்சு!

கொண்டதோ துயரம் ஐயா!
கொலையதோ பரிசு ஐயா!
நினைத்திட உன்னை ஐயா!
நெஞ்சது வேகுதையா!
கோபியே எங்கள் அவி
கொடியதே இந்தப் பூமி
சாமியே சரணம் ஐயா!
சாந்தியே கொள்வாய் கோபி!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நல்லகம், கச்சாய் வீதி, சாவகச்சேரி. - குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



திருமதி
### நவரத்தினம் இராசமணி

மலர்வு: 29.04.1957 உதிர்வு: 25.01.2003

அன்பின் திருவுருவாய் பாசத்தின் உறைவிடமாய்
எங்கள் மனம் நிறைந்த அன்பின் தெய்வமே!
நீர் தந்த இவ்வுலகில் நாம் வாழ வழி செய்து
உம் பிரிவைத் தந்ததினால் கலங்குதம்மா
எம் நெஞ்சம்.

சுழிபுரம் கிழக்கு,
சுழிபுரம். (57415) - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 9933, 222 3837 - 222 9944

## ஏகாதிபத்தியத்தை அதிர்ச்சிக்குள் ஆழ்த்தியிருக்கும் சீனாவின் நகர்வு

உலக வல்லாதிக்க நாடுகளின் ஆயுதப் போட்டா போட்டி, இதுவரை மண்ணிலும், வானிலும் இருந்தது. இப்போது அது முழுமையாக விண்ணுக்கும் வியாபித்து விட்டது.

இரண்டாவது உலகப் போர் முடிவுக்கு வந்தபோது, ஒரு புதிய உலக ஒழுங்கு பிறந்தது. பூமியைக் கபளீகரம் செய்து, தனது முழு அடக்குமுறை ஆளுகைக்குள் கொண்டுவரும் வெறியில் ஊழிக் கூத்தாடிய நாஸிஸ அரக்கன், அந்தக் களத்தில் மடிந்துபோக, அந்தச்சமாதியிலிருந்து இரண்டு வல்லாதிக்கப் பூதங்கள் உருக்கொண்டன. இந்த வல்லாண்மைச் சக்திகளின் கைகளில் அப்போது புதிய உலக ஒழுங்கு சரணடைந்தது.

கம்யூனிஸம், முதலாளித்துவம் என இரு துருவங்களாக உலகம் அச்சமயம் பிளவுபட்டு, முரண்பட்டு நிற்கும் நிலைமை எழுந்தபோது வல்லாதிக்கப் போட்டி - ஆயுத வலிமை பற்றிய இழுபறி - தரையையும், கடலையும், வானையும் தாண்டி - விஞ்சி - விண்வரை வியாபித்தது.

தரையிலிருந்தபடி விண்ணில் சுற்றிக் கொண்டிருக்கும் ஏவுகணைகள், செய்மதிகளைத் தாக்கி அழிப்பது, விண்ணில் தாக்குதல்களை நடத்தக் கூடிய ஏவுகணைகளைப் பூமிப்பந்தைச் சுற்றி விண்ணில் தவழவிட்டு, தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பது என்று இந்த வல்லாதிக்க சித்துவிளையாட்டு விரிந்து சென்றது.

இந்தக் காலகட்டத்தில் வல்லாதிக்கங்களுக்கு இரு பக்கங்களிலும் தலைமை வகித்த அமெரிக்காவும், சோவியத் ரஷ்யாவும் விண்வெளி ஆயுதப் போட்டியை மும்முரமாக முன்னெடுத்தன.

ஆனால், எண்பதுகளின் பிற்பகுதியிலும், தொண்ணூறுகளின் ஆரம்பத்திலும் சோசலிஸத்தின் சிதைவுடன் புதிய வரலாற்றுத் திருப்பம் ஏற்பட்டது. பனிப்போர் முடிவுக்கு வந்தது. கருத்தியல் முரண்பாடுகள் முற்றுப் பெற்றன. சித்தாந்த வேறுபாடுகளும், கோட்பாட்டுக் குளறுபடிகளும் அடங்கிப் போக, புதிய உலக ஒழுங்கை நிர்ணயிக்கும் சக்தியாக மேற்குலக ஜனநாயகம் எழுச்சிபெற்றது.

அப்போது வல்லாதிக்கப் போட்டியும் அடங்க, அதுவரை விண்வெளிவரை பரந்த ஆயுதப் போட்டா போட்டியும் தரை, கடல், வான் என்பவற்றுடன் அடங்கிப் போனது. விண்வெளியில் ஆதிக்கம் செலுத்தும் ஏகபோகம் அமெரிக்காவுடன் மட்டுப்படுத்தப்பட்டது.

ஆனாலும், அப்போது பிறந்த உலக ஒழுங்கிலும் கூட, சர்வதேச அமைதி - சமாதானம் - சாத்தியப்படவேயில்லை. எதிர்காலத்திலும் அது ஏற்படவே மாட்டாது என்பதும் தெளிவாகி வருகின்றது. பிணக்குகள் தீர்ந்து விடவில்லை. முரண்பாடுகள் நீங்கிவிடவில்லை. சமூகங்கள் ஒன்றோடு ஒன்று மோதுகின்றன. இனப்போர்கள் வெடிக்கின்றன. அடக்குமுறையும், அதிகாரத் திணிப்பும், ஆக்கிரமிப்பும் தொடர்கின்றன. அவற்றுக்கு எதிரான கிளர்ச்சியும், வன்முறையுமாகப் பூமிப்பந்தில் இரத்த ஆறு ஆங்காங்கே ஓடுகின்றது.

மேற்கத்திய கிறிஸ்தவ நாகரிகத்துக்கும், இஸ்லாமிய உலகிற்கும் - அல்லது இஸ்லாமிய அடிப்படை வாதத்திற்கும் - மத்தியிலான மோதலாகப் பெரும் யுத்தங்களும், ஆக்கிரமிப்புகளும், வல்லாதிக்கத் திணிப்புகளும், அடக்குமுறைகளும் கட்டவிழ்கின்றன.

எனவே, புதிய உலக ஒழுங்காகப் பல்வேறு நாகரிகங்கள் இடையிலான சர்ச்சைகளும், பிணக்குகளும் வெளிப்பட்டு வெடிக்கின்றன.

அந்த வகையில் பார்த்தால், கிழக்கு ஆசியாவில் சீன நாகரிகத்தின் பூதாகர - விஸ்வரூப - வளர்ச்சியும், முஸ்லிம் உலகில் நிகழ்ந்து வரும் இஸ்லாமியப் பண்பாட்டு எழுச்சியும், மேற்குலகின் கிறிஸ்தவ நாகரிகத்துக்குப் பெரும் அச்சுறுத்தலாக அமைந்து வருகின்றன என்பது கண்கூடு.

இந்தக் கட்டத்தில்தான் விண்ணில் சுற்றும் செய்மதிகளை, ஆய்வகங்களை - ஏன் விண்ணில் தவழும் ஆயுதப் பலமுடைய ஏவுகணைகளைக் கூட - தரையிலிருந்து ஏவுகணையைச் செலுத்தி அழிக்கும் சோதனையை வெற்றிகரமாக நடத்தி அமெரிக்காவுக்கு அதிர்ச்சி வைத்தியம் அளித்திருக்கின்றது சீனா.

மேற்கத்திய நாகரிகத்தின் உயர் பிரதிநிதியாக விளங்கும் அமெரிக்காவுக்கு - தன்னைத் தவிர வேறு எந்த நாடும் விண்வெளியில் ஆதிக்கம் செலுத்தக் கூடாது என்னும் ஏகபோக எதிர்பார்ப்போடு செயற்படும் ஏகாதிபத்தியவாதத்தின் மமதைத் திட்டத்துக்கு - கிழக்காசியாவின் சீன நாகரிகம் நல்ல 'சூடு' கொடுத்திருப்பதாகவே படுகின்றது.

புதிய உலக ஒழுங்கை நிலைநிறுத்துவதற்கான காய் நகர்த்தலில் நல்ல மாற்றத்தைக் கொண்டுவரக் கூடிய அங்கமாகவும் இது அமையக் கூடும்.

# பொருள்களை வாங்குவதற்கு மக்கள் நேற்று முண்டியடிப்பு

## விலைகள் திடீரென உயர்த்தப்பட்டன

யாழ்ப்பாணம், ஜன.23

உணவுப் பொருள்களை வாங்குவதற்கு மக்கள் நேற்று முண்டியடித்ததை யாழ்.நகரில் பல இடங்களிலும் காண முடிந்தது.

அத்தியாவசிய மற்றும் உணவுப் பொருள்கள் கிடைக்காமல் போகலாம் என்ற அச்சத்தினால் மக்கள் அவற்றை வாங்குவதற்கு அவசரப்படுவதையும் அவதானிக்க முடிந்தது.

வடமராட்சிக் கடற்பரப்பில் ஞாயிற்றுக்கிழமை நடந்த மோதலில் சிக்கி பருத்தித்துறை துறைமுகத்தில் பொருள்களை இறக்கும் பணியில் ஈடுபட்டிருந்து 'லிவர் பூல்' வணிகக் கப்பல் சேதத்திற்குள்ளானது தெரிந்ததே.

இந்தச் சம்பவத்தை அடுத்து நேற்றுக் குடாநாட்டில் பொருள்களின் விலைகள் வியாபாரிகளால் உயர்த்தப்பட்டிருந்தன.

அரிசி, சீனி, பருப்பு ஆகிய அத்தியாவசிய உணவுப் பொருள்களின் விலைகள் சிறிதளவே அதிகரிக்கப்பட்டிருந்தன.

அதேவேளை, உருளைக் கிழங்கு, செத்தல் மிளகாய், தேங்காய் எண்ணெய், சவர்க்காரம் ஆகியவற்றின் விலைகள் பல மடங்கு உயர்த்தபட்டிருந்தன.

கடந்த சில நாள்களாக 70 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்டுவந்த ஒரு கிலோ உருளைக்கிழங்கு நேற்று 120 ரூபாவாகவும், 350 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ செத்தல் மிளகாய் 500 ரூபாவாகவும், 300 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட ஒரு லீற்றர் தேங்காய்எண்ணை 500 முதல் 600 ரூபாவாகவும், 80 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட சவர்க்காரம் 160 ரூபாவாகவும் நேற்று விற்பனை செய்யப்பட்டன.

குடாநாட்டு வங்கிகளிலும் நேற்று மக்கள் கூட்டம் அதிகமாகக் காணப்பட்டது.வங்கிகளில் வைப்பில் இருந்த பணத்தைப் பெற்று மக்கள் பொருள்களைக் கொள்வனவு செய்யும் முயற்சியில் ஈடுபட்டிருந்தனர். யாழ்.நகரப் பகுதியில் நேற்று சனக்கூட்டம் கடந்த சில நாள்களை விட அதிகமாகக் காணப்பட்டது. (அ-8)

### ஞாயிறன்று மூவர் கடத்தல்

யாழ்ப்பாணம், ஜன.23

குடாநாட்டில் நேற்று முன்தினம் இரவு ஆயுததாரிகளால் மூன்று இளைஞர்கள் கடத்தப்பட்டுள்ளனர். மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.அலுவலகத்தில் இது குறித்து முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி கிழக்கைச் சேர்ந்த குமாரவேலு சுதாகரன் (வயது-38) என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையும்-

யாழ்.மத்தியூஸ் வீதியைச் சேர்ந்த வேலாயுதம் எமில் பிரமிற்றன் (வயது-26) என்ற இளைஞனும்-

ஈச்சமோட்டையைச் சேர்ந்த சிற்றம்பலம் புவனேந்திரன் (வயது-45) என்பவரும்-

அவர்களது வீடுகளில் வைத்து கடத்தப்பட்டுள்ளனர் என முறைப்பாடுகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-1-4)

## யாழ். நகர வடிகால்களைப் புனரமைக்க முடியாததால் நோய்கள் பரவும் அபாயம்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ். நகரை அண்டிய பகுதிகளிலுள்ள வடிகால்களில் ஏற்பட்டுள்ள சிதைவுகளை புனரமைப்புச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

யாழ். மாநகரசபை ஆணையாளர் மு.செ.சரவணபவ இதனைத் தெரிவித்தார்.

வடிகால்களைப் புனரமைப்புச் செய்வதற்கான மூலப்பொருள்களுக்கு குடாநாட்டில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்தே புனரமைப்பு வேலைகளைச் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

வடிகால்கள் சிதைவடைந்திருப்பதனால் கழிவுநீர் தேங்கி நிற்கும் சாதக நிலை அதிகரித்துள்ளது. இதனால், நுளம்புகள் பெருகி சிதைவுற்ற வடிகால்களுக்கு அண்மித்து வாழும் மக்கள் நோய்களால் பாதிக்கப்படும் ஏதுநிலை தோன்றியுள்ளது. (அ-4)

## தாக்குதலில் சேதமடைந்த கப்பல் விரைவில் சேவைக்குத் திரும்புமாம்!

### கடற்படைப் பேச்சாளர் சொல்கிறார்

வடக்கே பருத்தித்துறைக் கடற்பரப்பில் கடற்புலிகளின் தாக்குதலுக்கு இலக்கான சரக்குக் கப்பல் தற்போது காங்கேசன் துறைக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் திருத்தப்படுகிறது என்றும் - திருத்தப் பணிகள் முடிவடைந்ததும் அது விரைவில் சேவைக்குத் திரும்பும் என்றும் கடற்படைப் பேச்சாளர் டி.கே.பி. தஸநாயக்க நேற்று 'உதயனு'க்குத் தெரிவித்தார்.

தாக்குதலுக்கு உள்ளான கப்பல் தற்போது காங்கேசன்துறையில் பாதுகாப்பாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. சேதத் திற்கு உள்ளான கப்பலின் துவாரம் வழியாகக் கடல்நீர் உட்புகுந்து விட்டது. அவ்வாறு புகுந்த கடல்நீர் வெளியேற்றப்பட்டிருக்கின்றது. பருத்தித்துறையில் இறக்கப்படாத ஆயிரத்து 300 தொன் கோதுமை மா, கப்பலில் இருந்து தற்போது இறக்கப்பட்டுள்ளது- என்றார்.

### பலாலிக் கூட்டம் ரத்து

குடாநாட்டில் அத்தியாவசிய சேவை கள் குறித்து ஆராய்வதற்காக நேற்றுப் பலாலி யில் இடம் பெறவிருந்த கூட்டம் ரத்துச் செய்யப்பட்டது.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் திவாரத்ன இக் கூட்டத்தில் கலந்துகொள்ளவிருந்தார்.

## கைதான இளைஞர்களை விடுவிக்க ஆவணங்களுடன் பெற்றோர்கள் வரலாம்

### கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தெரிவிப்பு

கொழும்பு, ஜன.23

கைதான இளைஞர்களை விடுவிப்ப தற்கு பெற்றோர்கள் சகல ஆவணங்களுடனும் பொலிஸ் நிலையங்களில் சமுக மளித்து அவர்களைப் பொறுபேற்க முடியும் என்று கொழும்புப் பிரதேச பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் அபே குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலும் அதன் சுற்றுப்புற நகரங்களிலும் கைது செய்யப்பட்டுள்ள தமிழ் இளைஞர்களை விடுவிக்கப் பெற்றோர் நேரடியாகப் பொலிஸ் நிலையத்துக்கு அடையாள அட்டை, பிறப்புச் சான்றிதழ், வதிவிடத்தை உறுதிப்படுத்தும் கிராம சேவையாளர் அல்லது தோட்டத்துறையின் கடிதம் மற்றும் தொழில் புரியும் இடத்தை உறுதிப்படுத்தும் கடிதத்துடன் வரும்படி பிரதிப் பொலிஸ்மா அதிபர் றொஹான் அபேகுணவர்த்தன தெரிவித்தார் என்று பிரதியமைச்சர் எஸ். இராதாகிருஷ்ணன் நேற்று தெரிவித்தார்.

முக்கிய நகரங்களில் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட 98 இளைஞர்கள், பூஸா முகாமுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். இவர்களை விடுவிப்பது தொடர்பாகவும் பிரதியமைச்சர் நட வடிக்கை மேற்கொண்டு வருகின்றார். (ஐ-02)

### சிங்கள மகாவித்தியாலயத்தில் இன்று கண்சிகிச்சை முகாம்

யாழ்ப்பாணம், ஜன.23

யாழ்.சிங்கள மகாவித்தியாலய மண்டபத்தில் இன்று காலை 9மணி தொடக்கம் கண்சிகிச்சை முகாம் இடம்பெறவுள்ளது.

இந்த முகாமில் பங்குபற்றி கண்பரிசோதனை செய்வதுடன் இலவசமாக கண்ணாடிகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று படைத்தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (அ-1)

## ரணில்-கரு சந்திப்பு சுமுகமாக முடிவாம்

கொழும்பு, ஜன. 23

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவிற்கும் அதன் பிரதித் தலைவர் கரு ஜயசூரியவுக்குமிடையில் நேற்று மாலை ஐக்கியதேசியக் கட்சியின் தலைமைக் காரியாலயமான ஸ்ரீ கொத்தாவில் நடைபெற்ற சந்திப்பு சுமுகமாக நிறைவடைந்தது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனைத் தொடர்ந்து இன்று நடைபெறும் கட்சியின் நிர்வாகச் சபை கூட்டத்தில் இரு தரப்பினரும் கலந்துகொள்வார்கள் எனவும் அதேவேளை மீண்டும் ஒரு முறை இவர்கள் இருவரும் சந்தித்துப் பேசுவார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

**நாளை**

தை - 10
புதன்கிழமை
24.01.2007
திதி: சஷ்டி
முன்னிரவு : 11.10
நட்சத்திரம் : உத்தரட்டாதி
பிற்பகல்: 01.40 வரை
சுபநேரம் : [illegible]
ராகுகாலம் : [illegible]

## வவுனியாவில் நேற்றும் இருவர் சூட்டுக்குப் பலி

வவுனியா, ஜன. 23

வவுனியா தவசிக்குளம் பகுதியில் நேற்று 12.30 மணியளவில் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியாகியுள்ளனர் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு சுட்டுக்கொல்லப்பட்டவர்கள் 32 வயது, 26 வயது மதிக்கத்தக்கவர்கள் எனவும், இவர்களை இனங்காண முடியவில்லை எனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். [illegible] கொலை செய்யப்பட்டவர்களின் கரங்கள் துணியால் கட்டப்பட்டிருந்தன எனவும், வியாபார வாகனம் ஒன்றில் பயணித்த போதே இவர்கள் சுடப்பட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்று முன்தினம் குழுமாட்டுச் சந்தியில் பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இருவர் இறந்தனர்; மற்றொருவர் இன்று மரணமானார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (க-312)

## குடாநாட்டின் குட்டிச் செய்திகள்

### மாணவர் பகிஷ்கரிப்பு

வடமராட்சியில் கடத்தப்பட்ட இரு பாடசாலை மாணவர்களையும் விடுவிக்கக் கோரி வடமராட்சிப் பிரதேச மாணவர்கள் நேற்றுப் பாடசாலை பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வடமராட்சியில் வேலாயுதம் மகாவித்தியாலயம், ஹாட்லிக் கல்லூரி ஆகிய பாடசாலைகளைச் சேர்ந்த இரு மாணவர்களும் அண்மையில் காணாமற் போயிருந்தனர்.

இவர்கள் இருவரையும் விடுவிக்கப் கோரியே இந்தப் பகிஷ்கரிப்பு நேற்றுஇடம்பெற்றது.

நேற்று வடமராட்சிப் பிரதேசத்தில் பாடசாலை பஸ் சேவைகள் எவையும் இடம்பெறவில்லை. (அ-155-115)

### இளைஞனைக் காணவில்லை

சாவகச்சேரி வடக்கைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கஜேந்திரன் (வயது-21) என்ற இளைஞனைக் காணவில்லை.

கடந்த மாதம் 19ஆம் திகதி சம்பவதினம் அவர் நகரில் உள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்கு சென்றார் என்றும்- அதன் பின்னர் அவரைக் காணவில்லை என்றும்- யாழ். மனித உரிமை ஆணைக்குழுவில் செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டில் கூறப்பட்டுள்ளது. (அ-1-4)

### 2 கிளைகளில் திருட்டு

அளவெட்டி மல்லாகம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் இரண்டு கிளைகளில் ஒரே இரவில் திருட்டுக்கள் இடம்பெற்றுள்ளன.

அளவெட்டியில் உள்ள சங்கத்தலைமை அலுவலகத்திற்கு அருகாமையில் உள்ள இரண்டு கிளைகள் உடைக்கப்பட்டு அத்தியாவசியப் பொருள்களான அரிசி, மா, சீனி, பால்மா வகைகள் உட்பட பல பொருள்களும் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (1-68)

### பயண ஒழுங்கு ஏற்பாடு

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் இடம் பெற்ற இறுதிப் பரீட்சைக்குத் தோற்றிய வெளிமாவட்ட மாணவர்களுக்கு பயண ஒழுங்கு செய்யப்படவுள்ளது.

பயணஒழுங்கு தேவைப்படும் மாணவர்களை எதிர்வரும் வெள்ளிக்கிழமை நண்பகலுக்கு முன்னர் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அதிபர் என்.யோகராஜன் கேட்டுள்ளார். (1-வ)

### பயண ஒழுங்கு தேவை

வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரிய மாணவர்கள் 19பேர், தாம் வவுனியா செல்வதற்கான பயண ஒழுங்குகளை மேற்கொண்டு தருமாறு மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலகத்திடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக அவர்கள் ஒப்பமிட்டு மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

விடுமுறை நிமித்தம் யாழ். வந்த தாம் கப்பல் சேவை நிறுத்தப்பட்டதால் மீண்டும் வவுனியா செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக அவர்கள் தமது மகஜரில் தெரிவித்துள்ளனர். போக்குவரத்து வசதியின்மை காரணமாகத் தமது பயணம் தடைப்பட்டுள்ளமையால் தமது கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் மகஜரில் குறிப்பிட்டுள்ளனர். (அ-4-8)

### பதிவு செய்யுங்கள்

கல்வியியலாளர் நேர்முகப் பரீட்சைக்குத் தேற்ற முடியாதுள்ள குடாநாட்டுப் பரீட்சார்த்திகளை இன்று செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ்.கல்வியியலாளர் முகாமைத்துவ மண்டபத்திற்கு வந்து பெயர் விவரங்களைப் பதியுமாறு யாழ்.வலயக் கல்வி பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் கேட்டுள்ளார். (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமலையில் நேற்று தாக்குதல் சம்பவம்!

திருகோணமலையின் வடக்குப் பகுதியிலுள்ள கடற்பரப்பிற்கு அருகிலுள்ள காட்டுப் பகுதிகளில் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நேற்று தாக்குதல் சம்பவம் ஒன்று இடம் பெற்றது என இராணுவப் பேச்சாளர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

திருமலைக் கடற்பரப்பில் கடற்படையினர் நிலைநிறுத்தப்பட்டிருந்தனர். அங்கு நேற்று (ஞாயிறு) முதல் விடுதலைப் புலிகளும் திரண்டிருந்தனர். இது கடற்படையினருக்கு அச்சுறுத்தலாக இருந்தது. இதனையடுத்து, இலங்கை விமானப்படையினர் புலிகளின் இலக்குகள்மீது கடும் தாக்குதலை நடத்தினர். இதில் ஏற்பட்ட சேதவிவரங்கள் தெரியவரவில்லை. - என்றார். (க-12)

**வவுனியாவில் நேற்றுமாலை போக்குவரத்துச் சபை அதிகாரி சுட்டுக்கொலை**

வவுனியா மாவட்ட போக்குவரத்துச் சபையின் அத்தியட்சகர் தர்மகுலசிங்கம் (வயது 46) நேற்று பிற்பகல் 5.15மணியளவில் வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொல்லப்பட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். தமது அலுவலகத்தில் இருந்து அவர் வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளை இச் சம்பவம் இடம்பெற்றது. (1)

# மீளக் குடியமர்த்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டபோதே நீதிமன்றம் இப்படி உத்தரவு பிறப்பித்தது.

வலிகாமம் வடக்கில் பெரும் நிலப்பிரதேசம் உயர் பாதுகாப்பு வலயம் என்ற பெயரில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பதால், பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் தங்கள் பாரம்பரிய பூமியிலிருந்து விரட்டப்பட்டுள்ளன என்று தெரிவித்து, தங்களை மீளக் குடியமர உத்தரவிடுமாறு கோரி இந்த மனுக்களை மனுதாரர்கள் தாக்கல் செய்திருந்தனர்.

இராணுவத்தளபதி, யாழ்.மாவட்ட இராணுவத்தளபதி, யாழ். அரச அதிபர், சட்டமா அதிபர் உட்படப் பலர் எதிர்மனுதாரர்களாக இந்த மனுக்களில் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

இந்த மனுக்களை விசாரித்த உயர் நீதிமன்றம் அப்பிரதேசத்தில் மீளக் குடியமரக்கூடியோரின் பட்டியல் ஒன்றைத் தயார் செய்து சமர்ப்பிக்கும்படி ஏற்கனவே யாழ். அரச அதிபரைப் பணித்திருந்தது.

நேற்று மீண்டும் இந்த மனுக்கள் உயர் நீதிமன்றில் பிரதம நீதியரசர் சரத் என்.சில்வா, நீதியரசர்கள் ராஜா பெர்னாண்டோ, அன்ட்ரூ சோமவன்ஸ ஆகியோர் முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டன. அப்போது, மேற்படி பட்டியல் இன்னும் தாக்கல் செய்யப்படாதமையை நீதிமன்றம் கவனத்தில் எடுத்தது.

உயர்பாதுகாப்பு வலயப் பிரச்சினை காரணமாக இடம்பெயர்ந்தோருக்கு நிவாரணம் மற்றும் அடிப்படை வசதிகளை வழங்குவதற்காக அரசு மாதாந்தம் 3 கோடி 60 லட்சம் ரூபாவைச் செலவிட்டு வரும் நிலைமை இருப்பதால் இப்பிரச்சினைக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என பிரதம நீதியரசர் சுட்டிக்காட்டினார்.

எனவே, இச்சிக்கல்களுக்கு துரித கதியில் தீர்வுகண்டு, மக்களின் இக்கட்டை நிவிர்த்தி செய்வதாயின் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தில் மீளக் குடியமரக் கூடியோரின் பட்டியல் அவசியம். ஆகவே, அதனை உடன் சமர்ப்பிக்குமாறு யாழ். அரச அதிபருக்கு பணிப்புரை விடுக்க உத்தரவிடுகிறேன் - என்றார் பிரதம நீதியரசர்.

இந்த மனுக்கள் மீண்டும் ஏப்ரல் 14ஆம் திகதி உயர் நீதிமன்றத்தில் எடுத்துக் கொள்ளப்படும். (உ-06)

# உடன் பேச்சுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''மோதலை நிறுத்திவிட்டு, மீளப் பேச்சு மேசைக்குத் திரும்புவதற்குத் தாங்கள் தயார் என்று விடுதலைப் புலிகள் நாளையே அறிவிப்பார்களேயானால், நாம் உடனடியாகவே அவர்களுக்கு எதிரான தாக்குதல்களை நிறுத்திவிடுவோம். அப்படி அவர்கள் செய்யாவிட்டால், கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழ்ச் சிவிலியன்களை அவர்களது பிடியிலிருந்து விடுவித்து விட்டு அதன் பின்னரே அவர்களைப் பேச்சுக்கு அழைக்க வேண்டியிருக்கும்.'' - என்றார் அமைச்சர் ரம்புக்வெல.

புலிகளை அவர்களது வட பகுதிக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலிருந்து விரட்டப் போவதாக அரசு எச்சரிக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (உ)

# இனப்பிரச்சினைத் தீர்வுக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாவில் இடம்பெற்ற இறுதிச்சுற்றுப் பேச்சுவார்த்தையும் தோல்வியில் முடிவடைந்துவிட்டது. அதன்பின் பேச்சுக்கான அறிகுறிகளே தென்படவில்லை. அங்குள்ள மக்கள் துன்பத்தில் வாழ்கிறார்கள் என்றும் அவர் தெரிவித்தார்.

1983ஆம் ஆண்டிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகள் தமிழ் மக்களுக்குத் தனியான நாடு கோரி ஸ்ரீலங்கா அரசுடன் போரிட்டு வருகிறார்கள்.

கடந்த ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து இரண்டு லட்சம் மக்கள் வன்செயல்கள் காரணமாக இடம்பெயர்ந்துள்ளார்கள்.

இவை தவிர 3 லட்சத்துப் பத்தாயிரம் மக்கள் கடந்தகால போர்களினால் இடம் பெயர்ந்துள்ளார்கள். தற்போது மோதல்களில் ஆயிரக்கணக்கான மக்கள் சிக்குண்டு போயுள்ளார்கள். நாள்தோறும் சிறார்களும் இளைஞர்களுமாக கொல்லப்படும் அக்கிரமங்கள் அதிகரித்துள்ளன.

வன்முறைகள் இலங்கையின் எல்லாப் பகுதிகளுக்கும் பரவியுள்ளன. விமானத் தாக்குதல்களாலும் மற்றும் பஸ் குண்டு வெடிப்புகளாலும் மக்கள் கொல்லப்படுகின்றார்கள். குடும்பங்கள் தமது பாதுகாப்புத் தொடர்பான பயத்துடன் வாழ்கிறார்கள்.

அங்கு மனிதாபிமான உதவி நிறுவனங்களும் பெரும் இடர்களை சந்திக்கின்றன. மனிதாபிமான மற்றும் தொண்டர் நிறுவனங்களின் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கப்படவேண்டும் - என்றும் பிராங் பலேோன் தமது பேச்சின் போது குறிப்பிட்டார். (அ-ரி)

# ப.நோ.கூ. சங்கக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்படக்கூடிய சந்தர்ப்பம் இல்லை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

**காங்கேசன்துறையில் பொருள்கள் இறக்கப்படுகின்றன**

சேதமடைந்த ''லிவர்பூல்'' காங்கேசன்துறையில் தரித்து நிற்கின்றது.

''டப்ளின்'' என்ற கப்பலிலிருந்து காங்கேசன்துறையில் பாடசாலை மாணவருக்குத் தேவையான பாடப் புத்தகங்கள், காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள், சீருடைகள் என்பன இறக்கப்படுகின்றன.

எனினும், அடுத்துவரும் உணவுக் கப்பல்கள் தொடர்பான தகவல்கள் கிடைக்கவில்லை என்றும் - சிவில் நிர்வாக அலுவலக வட்டாரங்கள் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தன. (அ-1-17)


## புதிய கட்டடத் திறப்புவிழா அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான விய வருடம் தை மாதம் 10 ஆம் நாள் [24.01.2007] புதன்கிழமை நண்பகல் 12.01 மணியளவில் 315, பலாலி வீதி, பரமேஸ்வராச்சந்தி, திருநெல்வேலியில் இடம் மாற்றம் செய்யப்பட்ட

**யாழ் வைத்தியசாலை**

புதிய கட்டடத் திறப்பு விழாவிற்கு அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

**வைத்தியசாலையை திறந்து வைப்பவர்கள்**

**Dr.S.சிவசுப்பிரமணியம்**
காது, மூக்கு, தொண்டை சத்திரசிகிச்சை நிபுணர்.

**Dr.S.ரவிராஜ்**
சத்திரசிகிச்சை நிபுணர், யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர்.

315, பலாலி வீதி,
பரமேஸ்வராச் சந்தி,
திருநெல்வேலி. (57436)

நிர்வாகத்தினர்.


## கண்ணீர் அஞ்சலி

எமது நிறுவனத்தில் பணிபுரியும்
நா. கணேந்திரன் அவர்களின் அன்பு மகன்

**கணேந்திரன் செந்தூரன்** (கனடா)

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

ராஜன் தொலைத்தொடர்பு நிலையம்
மகாலக்ஷ்மி ஸ்ரோஸ், பருத்தித்துறை

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம்
26 ★ 07 ★ 1920



மறைவு
24 ★ 12 ★ 2006

24.12.2006 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்த
எமது குடும்பத்தலைவர்

**அமரர் சின்னத்தம்பி கந்தையா**

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

320A, ஆ.வ.வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### நாகமுத்து கனகையா

கோண்டாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் அரியாலை மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கனகையா நேற்று 22.01.2007 திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர்களான நாகமுத்து - நாகம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பேரின்பரதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான வைரவன் - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் தியாகசீலன் (லண்டன்), தியாகவதி (ஆசிரியை, கிளிநொச்சி மத்திய கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அனிஷா (லண்டன்), சிவகுமாரன் (எழுதுவினைஞர், யாழ்.பல்கலைக் கழகம்) ஆகியோரின் அன்பு மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 3 மணியளவில் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

46/10, ஆசீர்வாதப்பர் வீதி,
அரியாலை மேற்கு,
யாழ்ப்பாணம்.

தகவல்:
திருமதி சி.தியாகவதி,
வே.சிவகுமாரன்


## இலவசக்கணினிப்பயிற்சி

ஐ.நா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும் பங்காற்றிய எமது நிறுவனம் விசேட கணனிப் பயிற்சித் திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளது.

MCS
Supported By UNDP/JRRP

ICT,GIT மாணவர்களும் பங்குபற்றலாம்

விபரங்களிற்கும், பதிவுகளிற்கும் 27-01-2007 முன் நேரில்

324, பலாலி வீதி, யாழ்ப்பாணம்
(பரமேஸ்வராசந்தி அருகே)


## தவறிவிட்டது

கொக்குவில் நந்தாவில் அம்மன் கோயிலில் இருந்து பிறவுண் வீதி வழியாக நாவலர் வீதி நக்காவீதி சோமசுந்தரம் அவனியூ கண்டுக்குழி விதானையார் லேனிற்கு இடையில் 26 sri 7530 இலக்க லொறியின் காப்புறுதிப் பத்திரம் வரிப்பத்திரம், லிற்றஸ் சேட்டிபிக்கேற் என்பன கறுப்புநிற பையுடன் அத்தோடு டேற்றா ரவலர் பக்கட்டுடன் 21.01.2007 மாலை 5.30 - 6 மணிக்கு இடையில் தொலைந்துவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் முகவரியில் ஒப்படைக்கவும் சன்மானம் வழங்கப்படும்.

ச.கமலதேவன்
HNB அசூரன்ஸ், 62,64 ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
Off.: 021 222 6016 Mobil: 07730б[illegible]744


## சிங்களம்

அரச உத்தியோகத்தர்களுக்கும் பாடசாலை விட்டவர்களுக்கும் பேச, எழுத, வாசிக்கப் பழக்கும் வகுப்புகள்.

சனி, ஞாயிறு - நண்பகல் 12மணி
ஆரம்பம்: 03.02.2007 சனிக்கிழமை
பதிவு 25.01.2007 தொடக்கம் 02.02.2007 வரை.

K.Thurairaja (SLAS, Retd.Addl. Govt.Agent.)

கற்சுமி கல்வி நிறுவனம்
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.


## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை நாகேஸ்வரி



நாச்சிமார் கோயிலடியைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை நாகேஸ்வரி நேற்று 22.01.2007 காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரைப்பத்தரின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசதுரை மற்றும் நாகராசா ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்ற சோமசேகரம் மற்றும் விஜயானந்தன் (பிரான்ஸ்), யோகேஸ்வரன், நேசமலர் ஆகியோரின் தாயும் அசோகமாலா, இராசபரிமளம், நிர்மலாதேவி, முத்துக்குமார் (இளைப்பாறிய ஆசிரியர், யா/ இந்துக்கல்லூரி) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று பி.ப. 3 மணிக்கு செம்மணி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

19, [illegible]
நல்லூர். (57434)

தகவல்:
[illegible] (மருமகன்)

## மரண அறிவித்தல்கள்

### பூலோகசிங்கம் சோமசுந்தரம் (சோமு)



(ஓய்வு பெற்ற இ.போ.ச. சாரதி)

ஆனைக்கோட்டையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட பூலோகசிங்கம் சோமசுந்தரம் நேற்று (22.01.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற புவனேஸ்வரியின் (மலர்) கணவரும் புஷ்பா (பிரான்ஸ்), இதயராஜ் (கனடா), சைலோஜா, இன்பராஜ் (பிரான்ஸ்), மோகன்ராஜ் ஆகியோரின் தந்தையும் சிவகுமார் (பிரான்ஸ்), திரு (கனடா), பூபாலபிள்ளை, ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்), ரஞ்சிதமலர் ஆகியோரின் மாமனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கல்லுண்டாய் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சோமசுந்தரம் வீதி,
ஆனைக்கோட்டை. (57435)

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

### திருமதி கனகசுந்தரம் இராசம்மா

காரைநகர், நடுத்தெருவைப் பிறப்பிடமாகவும், வீமன்காமம், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் இடம்பெயர்ந்து லவ்லேன், உடுவிலைப் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கனகசுந்தரம் இராசம்மா நேற்று (22.01.2007) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசுந்தரத்தின் (சிமெந்து கூட்டுத்தாபனம்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற அம்பலவாணர் (கல்வித்திணைக்களம்), காலஞ்சென்ற கனகம்மாவின் சகோதரியும் ஞானசௌந்தரி (உப தபால் அதிபர், மாவிட்டபுரம்), வீரவனிதா, தேவதாஸ் (சீமெந்து கூட்டுத்தாபனம்), இராஜசுலோசனா, சந்திரதாஸ் (ஜேர்மனி), இந்திரதாஸ் (கனடா), சூரியதாஸ் (சுவிஸ்), ஜெயதாஸ் (நோர்வே), காலஞ்சென்ற குகதாஸ், பிறேமதாஸ் ஆகியோரின் தாயும் ஜெகதீசன் (வைத்தியலிங்கம் அன்ட் கம்பனி), சசிகலா (ஜேர்மனி), விஜயலட்சுமி (கனடா), விமலாதேவி (சுவிஸ்), தனலட்சுமி (நோர்வே) ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீமன்காமம், தெல்லிப்பழை,
லவ்லேன், உடுவில். (57437)

தகவல்:
க.தேவதாஸ் (மகன்)

### சிவஸ்ரீ இரத்தினஐயா சிதம்பரநாதக்குருக்கள்

மாவை, கொல்ல[illegible]ட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆதீனத்தைச் சேர்ந்த சிவஸ்ரீ இரத்தினஐயா சிதம்பரநாதக்குருக்கள் நேற்று (22.01.2007) திங்கட்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2007) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மல்லாகம் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
சு.சிவஷண்முகானந்தக்குருக்கள்.

### சின்னத்தம்பி பொன்னம்பலம்

நயினாதீவு, முதலாம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பொன்னம்பலம் நேற்று (22.01.2007) திங்கட்கிழமை நயினாதீவில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நயினாதீவு.

தகவல்:
கரன் (மகன்).

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org